1981 மார்ச் 5] [பேரவைத் தலைவர்]

அவர்களைப் பற்றித் தவறான தகவலைத் தர வேண்டும் என்பது நோக்கமல்ல என்றும், குறிப்பிட்டார்கள். மேலும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு வெளியிலே நடந்தது முழுவதும் தெரிந்திருக்கும் எனினும் இந்த அவையைத் திசை திருப்ப வேண்டுமென்ற நோக்கத்தோடு கூறினார் என்று சொல்ல முடியாது. உறுப்பினருக்குக் களங்கம் ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில சொல்லப்படவில்லை என்றும், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மேலும் அவர் கூறுகையில். வழக்கு ஒன்று விசாரணையில் இருப்பதன் காரணமாக இதிலே உண்மை நிலை கட்டாயமாகத் தெரியவரும் என்றும், அப்போது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படுமேயானால் அந்த வகையில் அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதையும் குறிப்பிட்டார்.

எனவே, மாண்புமிகு அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் உள்நோக்கோடும், உறுப்பினருக்குக் களங்கம் ஏற்படுத்த வேண்டும் என்று எண்ணத்தோடும் எந்தத் தகவலையும் பேரவைக்கு அளிக்கவில்லை என்பதாலும், என்ன நடந்தது, எப்படி நடந்தது என்பது வழக்கு விசாரணை முடிந்தபின்தான் தெரியவரும் என்பதாலும், இப்பிரச்சினையில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கையில் அவை உரிமை மீறல் எதுவும் எழவில்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

3. தகவல் கோரல்.

(அ) பதிவு செய்யப்பெற்ற டேப்.

*டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நேற்றைய தினம் விவாதிக்கப்பட்ட உரிமைப் பிரச்சினையைப் பற்றி நான் பேச விரும்பவில்லை. இங்கே உரிமைப் பிரச்சினை பற்றிப் பேசிய முதலமைச்சரவர்கள், திரு. அன்பரசு, எம். பி. அவர்கள் காஞ்சிபுரம் நகர விழாவிலே பேசியது குறித்துக் குறிப்பிட்டார்கள். இன்று காலையில் திரு. அன்பரசு, எம். பி. அவர்கள் என்னுடன் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு தான் அவ்வாறு பேசவில்லை என்று கூறி, அது சம்பந்தமாக அறிக்கை விடுவதாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால் நேற்று மாண்புமிகு முதலமைச்சர் இங்கே டேப்பை எடுத்துக் காட்டி, பேசியிருப்பதாகச் சொன்னார்கள். நாங்கள் எங்களுடைய சந்தேகத்திற்கு விளக்கம் பெறுவதற்காகத் தாங்கள் தங்கள் அறையில் எதிர்க்கட்சித் தலைவர்களை அழைத்து, அவை முன்னவரவர்களையும் வைத்துக்கொண்டு அந்த டேப்பைப் போட்டுக் காட்டுவீர்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுவரையில் டேப் போடுவது சபையின் மரபாக இருந்ததாகத் தெரியவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, புதிய மரபை உருவாக்கலாமே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றைய தினம் முதலமைச்சர் சொன்னதைப் பற்றிக் கேட்கிறார். நேற்று அவர் எதிரிலேயே உட்கார்ந்திருந்தார், அப்பொழுதே எதிர்க் கட்சித் தலைவர் கேட்டிருக்கலாம்.

டாக்டர் மு. கருணாநிதி: அது அவைக் குறிப்பிலேயே இடம் பெறாது என்று கருதினோம். ஆனால், எல்லாப் பத்திரிகை களிலும் முதலமைச்சர் டேப் எடுத்துக் காட்டினார் என்ற செய்தி வந்துள்ளது. டேப் எடுத்துக் காட்டி விளாசினார் என்று ஆளுங் கட்சிப் பத்திரிகையிலே போடப்பட்டிருக்கிறது. அந்த விளாசல் என்ன என்பதை நாங்கள் பார்த்து விட வேண்டும். அதைப் போட்டுக் காட்டுங்கள். (குறுக்கீடுகள்—கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பேசுகின்றபொழுது, அங்கே பேசிய பேச்சுக்களுடைய, சொற்பொழிவுகளுடைய டேப்புகள் இருக்கின்றன என்று குறிப் பிட்டார்கள். அந்த டேப்பிலே என்ன இருக்கிறது என்பதைப்பற்றி அறிந்துகொள்ள விரும்பினால், தாங்கள் முதலமைச்சரோடு கலந்து பேசி என்ன செய்வது என்பது பற்றி முடிவு செய்யலாமே தவிர, இப்படித்தான் இருக்க வேண்டுமென்று ஒரு முறையை வகுக்க வேண்டியதில்லை. (குறுக்கீடுகள்—கூச்சல், குழப்பம்).

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிக்கைகள்

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்கட்சித் தலைவர் அவர்கள் பேசியதனுடைய தொடர்பாக அல்ல. இங்கே, நம்முடைய ஆளுங்கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. சேடப்பட்டி முத்தையா அவர்களும், திரு. நாஞ்சில் வின்சென்ட் அவர்களும், திரு. வெள்ளைச்சாமி அவர் களும், திரு உகம்சந்த் அவர்களும் ஒரு உரிமைப் பிரச்னையைத் தந்திருக்கிறார்கள். அது இதுவரையிலே எடுத்துக்கொள்ளப் படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று திரு. கிருஷ்ண மூர்த்திக்குக் கூறிய அதே விளக்கம்தான் உங்களுக்கும் தருகி றேன். உரிமைப் பிரச்னையை எடுத்துக்கொள்வதும், எடுத்துக் கொள்ளாததும் என்னுடைய உரிமை, ஏற்கனவே, இந்தச் சபையிலே பலமுறை அதைப் பற்றி தீர்ப்புகளை அளித்திருக் கிறேன். அது சம்பந்தமாகக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை